தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:

94436 99066

namadhudhinakani@gmail.com

www.dhinakani.com

நமது தினகனி

NAMADHU DHINA KANI

RNI-TNTAM/2023/88253


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 46 | 4 Pages | 15.9.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 46 | 4 பக்கங்கள் | 15.9.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாந் தொழும்**

**விளக்கம்:**

தவ வலிமையால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்று நீங்கப் பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெருமையை உணர்ந்து) தொழும்.

# அமெரிக்க பயணம் நிறைவு: சென்னை திரும்பினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, செப். 15

தமிழகத்துக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில், முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த மாதம் 27ம் தேதி இரவு அரசுமுறை பயணமாகஅமெரிக்காபுறப்பட்டு சென்றார். சான் பிரான்சிஸ்கோவில் 29ம் தேதி நடந்த தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்றார். கூகுள் உள்ளிட்ட நிறுவனங்களின் உயர் அலுவலர்களைசந்தித்து, தமிழகத்தில்முதலீடுசெய்யுமாறுஅழைப்பு விடுத்தார்.



கடந்த 2ம் தேதி சிகாகோ சென்றார். அங்கும் தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, தமிழகத்தில் முதலீடுசெய்யவருமாறுஅழைப்பு விடுத்தார். இரு இடங்களிலும் பல்வேறு தமிழ் சங்கங்கள், தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள், அமெரிக்காவாழ் தமிழர்களை சந்தித்தார். மொத்தம் ரூ.7,616 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தமிழக அரசு மற்றும் அந்த நிறுவனங்களுக்கு இடையே முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகின.

இதன் மூலம் தமிழகத்தில் 10 ஆயிரத்து 965 வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 17 நாட்கள் அமெரிக்கா பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை திரும்பினார். சென்னை விமான நிலையம் வந்த மு.க.ஸ்டாலினுக்கு வரும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அரசு சார்பிலும், தி.மு.க. சார்பிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

## இலங்கையில் பட்டாம்பூச்சி திருடர்களுக்கு ரூ.1½ கோடி அபராதம்



கொழும்பு,, செப். 15

இத்தாலியை சேர்ந்த லூகி பெரார் என்பவர் தனது 28 வயதுமகனுடன்இலங்கையை சுற்றி பார்க்க வந்தார். தென்கிழக்கு இலங்கையில் உள்ள பிரபல யாலா தேசிய பூங்காவை அவர்கள் சுற்றி பார்த்து கொண்டிருந்தனர். அப்போது அங்குள்ள பட்டாம்பூச்சிகளை அவர்கள் கண்ணாடி குடுவைக்குள் அடைத்து வந்து சேகரித்தனர்.

பின்னர் அவற்றை கொன்று கெமிக்கல் மூலம் பதப்படுத்தி தங்கள் நாட்டிற்கு கொண்டு செல்ல திட்டமிட்டிருந்தனர். அப்போது அங்குள்ள வன காப்பாளர்களால் கையும், களவுமாக பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதுகுறித்தான வழக்கு கொழும்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. விசாரணையில் 300க்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சிகளை அவர்கள் கொன்று பதப்படுத்த முயன்றது தெரிய வந்தது. இதனையடுத்து தந்தைமகன் இருவருக்கும் சுமார் ரூ.1½ கோடி அபராதமும் (2 லட்சம் அமெரிக்க டாலர்கள்) கட்டத்தவறினால் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பு கூறியது.

## சிறையில் 260 பெண் கைதிகளுக்கு பாலியல் தொல்லை ஐ.நா. அதிர்ச்சி தகவல்

ஆப்பிரிக்கா, செப். 15

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசின் மகாலா நகரில் மத்திய சிறைச்சாலை அமைந்துள்ளது. ஆண் கைதிகள் மட்டுமின்றி பெண் கைதிகளும் இந்த சிறையில் அடைக்கப்படுகிறார்கள். 3 ஆயிரம் பேர் அடைக்க வசதி உள்ள அந்த சிறையில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

அளவுக்கு அதிகமானோர் அங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளதால் அங்கே உள்ள கைதிகள் இடையே மோதல் போக்கு, பாலியல் அத்துமீறல்கள் ஆகியவை அவ்வப்போது அரங்கேறி வருகின்றன.

இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த சிறையில் வன்முறை ஏற்பட்டு கைதிகள் தப்பியோட முயன்றனர். இதனால் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 129 பேர் உயிரிழந்தனர். சிறை உடைப்பு முயற்சி குறித்து போலீசார் சார்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் சிறை வன்முறையின்போது பெண் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த பகுதிக்குள் ஆண் கைதிகள் அத்துமீறி நுழைந்த தகவல் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏராளமான பெண் கைதிகள், பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டது தெரியவந்துள்ளது.

சிறை வன்முறை சம்பவத்தை பயன்படுத்திக்கொண்டு பெண்கள் சிறைகளுக்குள் புகுந்தவர்கள் பெண் கைதிளை வலுக்கட்டாயமாக பாலியல் பலாத்காரம் செய்தனர். சிறையில் அடைக்கப்பட்டிருந்த 348 பெண்களில் 268 பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகி உள்ளனர். அதில் 17 பேர் 18க்கு வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் ஆவர்.

பாதிக்கப்பட்ட பெண் கைதி ஒருவர், தன்னை ஒரே சமயத்தில் 12 பேர் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார் தெரிவித்துள்ளார். இதுகுறித்தான அதிர்ச்சி`கரமான அறிக்கையை ஐ.நா. அமைப்பு வெளியிட்டுள்ளது.

காங்கோவில் சிறை வன்முறையின்போது 260 பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## ஈராக் அமெரிக்க படைகளின் கூட்டு ஆபரேசனில் ஐ.எஸ். கமாண்டர் கொலை

ஈராக், செப். 15

ஈராக்கில் ஈராக் படைகள் மற்றும் அமெரிக்க ராணுவம் இணைந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு ஒடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்ற. கடந்த மாதம் இறுதியில் இருந்து ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக கூட்டாக அதிரடி நடவடிக்கை எடுத்து வருகின்றன.

ஈராக்கின் மேற்கு பிராந்தியமான அன்பர் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஈராக்கின் தேசிய புலனாய்வு சர்வீஸ் மற்றும் ஈராக் விமானப்படை ஆகியவை அமெரிக்க படைகளுடன் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற சண்டையில் ஈராக் அமெரிக்கா கூட்டு ஆபரேசனில் ஐ.எஸ். கமாண்டர் அபு அலி அலதுனிசி கொலை செய்யப்பட்டார் என ஈராக் தெரிவித்துள்ளார். மேலும், ஐ.எஸ். துணை கமாண்டர்அகமது ஹமீத் ஸ்வெயினும் கொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் ஐ.எஸ். பயங்கரவாதிகளும் பலர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளது.

அபு அலி அல்துனிசி துனிசியாவில் இருந்து ஈராக்கிற்கு வந்தவர். இவரது தலைக்கு அமெரிக்கா 5 மில்லியன் டாலர் அறிவித்திருந்தது.

ஐ.எஸ். ஸ்லீப்பர் செல் ஈராக் மற்றும் சிரியாவில் கடந்த சில வருடங்களாக அதிகரித்து வருகிறது. ஸ்லீப்பர் செல்கள் அடிக்கடி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதால் உயிர்ப்பலி அதிகரித்து வரும் நிலையில் இது போன்ற தாக்குதல் நடத்தப்படுகிறது.

இரண்டு வாரங்ளுக்கு முன்னதாக அமெரிக்க ராணுவம் மற்றும் ஈராக் படைகள்இணைந்து ஈராக்கின்மேற்கு பாலைவனபகுதியில்தாக்குதல் நடத்தியது. இதில் 15 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த 7 வீரர்கள் காயம் அடைந்தனர்.

நேற்று நடைபெற்ற ஆபரேசனில் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து ஆயுதங்கள், கம்ப்யூட்டர்கள், செல்போன்ன்கள், 10 வெடிப் பொருள் பெல்ட்கள் கைப்பற்றப்பட்டதாக ஈராக் தெரிவித்துள்ளது.

## மன்னிப்பு கோரிய தொழிலதிபரின் வீடியோ: மன்னிப்பு கேட்ட அண்ணாமலை



சென்னை, செப். 15

ஜி.எஸ்.டி. குறித்து தனது ஆதங்கத்தை தெரிவித்த அன்னபூர்ணா உரிமையாளர் சீனிவாசன், மத்திய நிதியமைச்சர் நிர்மலாசீதாராமனிடம்மன்னிப்பு கேட்டதாக சமூக வலைத்தளங்களில்தற்போதுவீடியோஒன்று வைரலாகி வருகிறது.

இந்த வீடியோவில் நிர்மலா சீதாராமனிடம் அன்னபூர்ணா உணவக உரிமையாளர் மன்னிப்பு கேட்டது பதிவாகி உள்ளது.

இந்நிலையில் அன்னபூர்ணா உணவக உரிமையாளர் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் மன்னிப்பு கேட்ட வீடியோ வெளியான விவகாரம் தொடர்பாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை மன்னிப்பு கோரி உள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பதிவில், தனிப்பட்ட இந்த சந்திப்பு குறித்த வீடியோவை எங்கள் நிர்வாகிகள் வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன். தமிழக பாஜக சார்பில் மன்னிப்பு கோருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## மத்திய, மாநில அரசுகள் கைத்தறி தொழிலை பாதுகாக்க வேண்டும்: ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, செப். 15

த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

விசைத்தறி தொழிலில் ஈடுபடுபவர்களால் கைத்தறி தொழிலில் ஈடுபடும் நெசவாளர்கள் பாதிக்கக்கூடாது என்பதையும், தரம் மிக்க அசல் வஸ்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதையும் மத்திய, மாநில அரசுகள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அதாவது 1985 ரக ஒதுக்கீடு தடைச்சட்டத்தில் உள்ள கோட்பாடுகள் முறையாக சரியாக கடைபிடிக்க வேண்டும் என்பதை மத்திய, மாநில அரசுகள் உறுதியாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு விசைத்தறியில் எந்தவித ஜரிகையும் பயன்படுத்தி சேலை நெசவு செய்யக் கூடாது என கைத்தறி நெசவாளர்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



விவசாயத்திற்கு அடுத்த படியாக உள்ள கைத்தறி தொழில் பாதிக்கப்பட்டால் இந்தியாவின் பாரம்பரியத்திற்கும், பெருமைக்கும் உரிய பட்டு கைத்தறித் தொழில் நலிவடைந்து போகும். இதனால் கைத்தறி தொழிலும், கைத்தறி தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழக்கும் நிலையில் உள்ளனர்.

இச்சூழலில் கைத்தறி தொழிலில் ஈடுபட நெசவு செய்யும் தொழிலாளர்கள் வரத் தயங்குகிறார்கள்.

எனவே மத்திய, மாநில அரசுகள் கைத்தறி தொழிலில் ஈடுபடும் நெசவாளர்களின்கோரிக்கையை ஏற்று, கைத்தறி தொழிலைப் பாதுகாத்து, கைத்தறி நெசவாளர்களையும் அவர்களின் குடும்பங்களையும் முன்னேற்ற வேண்டும்.

இவ்வாறுஅவர்கூறியுள்ளார்.




மதுரை மாவட்டம் புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக தென் மண்டல ஆலோசனைக் கூட்டம் ராமா சுப்பு கலையரங்கத்தில் நடைபெற்றது இதில் மாநில துணை செயலாளர் முருகேசன் கிழக்கு ஒன்றிய செயலாளர் பரமசிவம் மேலூர் வட்டம் ஒன்றிய செயலாளர் தாட்கோ அழகர் மற்றும் மேற்கு ஒன்றிய செயலாளர் வைர மூர்த்தி பங்கேற்றனர் மற்றும் தலைமை மாநில முதன்மைச் செயலாளர் ருசேந்திரகுமார் மாநிலச் செயலாளர் பரணி மாரி கலந்து கொண்டனர்




மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி கூட்டு ரோட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் எச்சூரி அவர்கள் மறைவை ஒட்டி நடந்த இரங்கல் கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தை கட்சி சார்பாக மாநில துணை செயலாளர் துரைவளவன் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் திருநாவுக்கரசு வளத்தி முகாம் செயலாளர் வி எம் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார் இந்நிகழ்ச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் உதயகுமார் தலைமை தாங்கினார் வட்ட செயலாளர்கள் முருகன் கண்டனூரை ஆற்றினார்



விழுப்புரம் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு II (தொகுதி II மற்றும் II A) பதவிகளுக்கான முதல்நிலை தேர்வு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி, நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், உதவி ஆணையர் (கலால்) முருகேசன் உட்பட பலர் உள்ளனர்.

# தமிழகத்தில் ஆராய்ச்சி படிப்புக்கான கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும்: கவர்னர் ஆர்.என்.ரவி பேச்சு

சென்னை, செப். 15

தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு2024 (என்.ஐ.ஆர்.எப்.) தரவரிசையில் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிய கல்வி நிறுவனங்களுக்கு பாராட்டு விழாவும், தமிழ்நாட்டின் உயர் கல்வி சிறப்பு குறித்த கருத்தரங்கமும் சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் நேற்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற கவர்னர் ஆர்.என்.ரவி பேசியதாவது:



நாட்டின் சிறந்த கல்லூரிகளில் முதல் 20 இடங்களை தமிழகத்தைச் சேர்ந்த 28 கல்வி நிறுவனங்கள் தொடர்ச்சியாக பெற்று வருவது பெருமைக்குரியது. இந்த நிகழ்ச்சி தற்போது 3வது முறையாக நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியின் நோக்கம் மாநிலத்தில் இருக்கும் கல்லூரிகள் தனியாக செயல்படுவதை மாற்றி, மற்ற கல்லூரிகளுடன் இணைந்து செயல்படுவதற்கு ஊக்குவிப்பதாகும்.

தமிழகத்தில் ஆராய்ச்சி (பி.எச்.டி) படிப்புக்கான கல்வியின்தரத்தைஉயர்த்த வேண்டும். பி.எச்.டி. முடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆனால், அதன் தரம் திருப்திகரமாக இல்லை. ஒருசில கல்வி நிறுவனங்களில் மட்டுமே பி.எச்.டி.க்கான கல்வி தரம் சிறப்பாக உள்ளது. நம் நாட்டின் அறிவுசார் சொத்துகளை உயர்த்துவதற்கு அதிக தரம் கொண்ட பி.எச்.டி. படிப்புகளை கொண்டுவர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த நன்கிலி கொண்டான் புதியதாக உருவாக்கப்பட்ட சுங்க சாவடி தொடங்கிய நிலையில் சாலைகள் சரியான முறையில் போடாமல் ஜல்லி .கற்கள்.சாலை.யோரம்அதிகளவில் கற்கள் உள்ளன இருசக்கர வாகன ஓட்டிகள் வாகனங்களை ஓட்டி செல்லும் காட்சி சாலையை சரியான முறையில் அமைக்க நெடுசாலை .துறை ஆணையம் நிர்வாகம் அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும்.சமூக ஆர்வலர் கோரிக்கை வைக்கின்றனர்

# ஓணம் திருநாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, செப். 15

கேரள மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய சிறப்புமிக்க திருவிழா ஓணம். சாதி, மத வேறுபாடின்றி அனைத்து மலையாளிகளாலும் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையை கேரளாவின் அறுவடை திருநாள் என்றும் அழைக்கிறார்கள். ஓணம் பண்டிகை நாளை (செப்.15) கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓணம் திருநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

கேரள மக்களின் பண்பாட்டுப் பெருவிழாவான ஓணம் திருநாள் உலகெங்கிலும் வாழும் மலையாளிகளால் எழுச்சியுடன் நாளை (1592024) கொண்டாடப்படுகிறது. அத்தப் பூக்கோலம், அறுசுவை சத்ய விருந்து, பல்வேறு கலைநிகழ்ச்சிகள், போட்டிகள் என மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழும் நாளாகத் திருவோணம் அமைந்துள்ளது.



நல்லாட்சி புரிந்த மன்னனை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாமல் சூழ்ச்சியாலும் வஞ்சகத்தாலும் வீழ்த்தினாலும், அவனை மக்கள் மனங்களில் இருந்து அகற்ற முடியாது என்பதை உணர்த்தும் கொண்டாட்டமாகவே ஓணத்தைக் காணவேண்டும்.

திராவிட உடன்பிறப்புகளான கேரள மக்களுக்கு ஓர் இடர் என்றால் உடனடியாக உதவிக்கரம் நீட்டத் தமிழ்நாடு என்றுமே சகோதர உணர்வோடு முன்னிற்கும். அந்த வகையில்தான், அண்மையில் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவின்போது தமிழ்நாடு அரசின் சார்பில்

5கோடிரூபாய்நிதியுதவி அளித்ததோடு, மீட்பு, மருத்துவக் குழுக்களையும் அனுப்பி வைத்தோம். பெருமழை விளைவித்த பாதிப்புகளில் இருந்து மலையாளிகளுக்கே உரிய போராட்டக் குணத்துடன் மீண்டு வரும் கேரள மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாக

இந்த ஓண நன்னாள் அமையும் என்று நம்புகிறேன். சமத்துவம், சகோதரத்துவத்தின் வெளிப்பாடாக ஓணத் திருநாளைக் கொண்டாடும் எனது அன்பிற்கினிய மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்கள் சகோதரன் ஸ்டாலினின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# பள்ளிகளில் நேரடியாக ஆய்வு செய்ய மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை உத்தரவு

சென்னை, செப். 15

செங்குன்றம் அருகே உள்ள பம்மது குளம் பகுதியில் அரசினர் உதவி தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஆனால் இந்த ஆண்டு பள்ளியில் மாணவர்கள் குறைந்ததை மறைத்து 566 மாணவர்கள் பள்ளியில் படித்து வருவதாக கணக்கு காட்டியதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த பள்ளியில் வெறும் 219 மாணவர்களே படித்து வருகின்றனர்.




கடந்த சில நாட்களுக்கு முன்புமாவட்டமுதன்மை கல்வி அலுவலர் ஆய்வின்போது இது வெளிச்சத்துக்கு வந்தது. இதையடுத்துபள்ளியின்தலைமை ஆசிரியை லதா மற்றும் இதனை கண்காணிக்காத வட்டார உதவி தொடக்கக் கல்வி அலுவலர் மேரி ஜோசப் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இதேபோல் தமிழகம் முழுவதும் பல பள்ளிகளில் போலியாக மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி காட்டி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்து உள்ளது.

இதைத்தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. அதில், தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளிகளில் நேரடியாக ஆய்வு செய்து, பணியாற்றும் ஆசிரியர்களின் விபரங்கள், மாணவர்களின் எண்ணிக்கை விபரங்களை சரிபார்த்து ஆய்வு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஓணம் திருநாள் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

சென்னை, செப். 15

கேரள மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய சிறப்புமிக்க திருவிழா ஓணம். சாதி, மத வேறுபாடின்றி அனைத்து மலையாளிகளாலும் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையை கேரளாவின் அறுவடை திருநாள் என்றும் அழைக்கிறார்கள். ஓணம் பண்டிகை நாளை (செப்.15) கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஓணம் திருநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் பதிவில்,

அன்பு, அமைதி, சகோதரத்துவம் வளர்க்கப்பட வேண்டும்; அகந்தையும், ஆணவமும் அகற்றப்பட வேண்டும் என்கிற உயரிய கருத்தினை அனைவரும் அறியும் வகையில், மலையாள மொழி பேசும் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படும் இந்தத் திருஓணத் திருநாளில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது நல்வழியில், அனைவருக்கும் எனது இதயங்கனிந்த "ஓணம்" திருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# 2 நாட்களுக்கு சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு கூடுதலாக 1,515 பஸ்கள் இயக்கம்

சென்னை, செப். 16

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் வெளியிட்ட அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

தமிழகத்தில் தொடா் விடுமுறை நாட்களான ஞாயிற்றுக்கிழமை (15ந் தேதி) மற்றும் மீலாது நபி (16ந் தேதி) ஆகிய தினங்களை முன்னிட்டு, கூடுதல் சிறப்பு பஸ்களை இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது. அதன்படி, இன்று மற்றும் நாளை ஆகிய நாட்களில் சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகா் கோவில்,

கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூா் ஆகிய ஊா்களுக்கு கூடுதலாக 955 பஸ்களை இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.




இதேபோல, சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூா், பெங்களூரு ஆகிய ஊா்களுக்கு கூடுதலாக 190 பஸ்களும், மாதவரத்தில் இருந்து 20 பஸ்களும், பெங்களூரு, திருப்பூா், ஈரோடு, கோவை உள்ளிட்ட பல்வேறு ஊா்களுக்கு 350 பஸ்கள் என மொத்தம் 1,515 கூடுதல் பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரை பொதுமக்கள் தங்கள் சொந்த ஊா்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக தேவைக்கேற்ப கூடுதல் பஸ்கள் இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குரூப்2, 2ஏ முதல்நிலைத் தேர்வு தொடங்கியது

சென்னை, செப். 15

தமிழ்நாடு முழுவதும் இன்று குரூப்2 தேர்வு தொடங்கியது.

துணை வணிகவரி அதிகாரி, தொழிலாளா் நலத் துறை உதவி ஆய்வாளா், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலா், சாா்பதிவாளா் உள்ளிட்ட பதவியிடங்கள் குரூப் 2 பிரிவில் வருகின்றன.

இதேபோன்று, உதவியாளா்கள்உள்படஅமைச்சுப் பணியில் காலியாக உள்ள இடங்கள் குரூப் 2ஏ பிரிவில் உள்ளன. 2 பிரிவுகளிலும் சோ்த்து மொத்தமாக 2,327 காலிப் பணியிடங்களுக்கான எழுத்துத் தோ்வு அறிவிக்கையை அரசுப் பணியாளா் தோ்வாணையம் வெளியிட்டது.



இந்த பணியிடங்களுக்கான குரூப் 2 மற்றும் 2ஏ தோ்வை 38 மாவட்டங்களில் 2,763 தேர்வு மையங்களில் 7 லட்சத்து 93 ஆயிரத்து 966 போ் எழுதுகின்றனர்.

ஒவ்வொரு தோ்வு மையத்துக்கும் ஆய்வு அலுவலா் ஒருவரும் மாவட்ட ஆட்சியா் அலுவலகம் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 2,763 தோ்வு மையங்களுக்கு முதன்மை கண்காணிப்பாளா்கள், கண்காணிப்பாளா்கள் நியமிக்கப்பட்டுள்ளனா்.

# தடை செய்யப்பட்ட சீன பூண்டுகள்: தமிழகத்தில் தங்கு தடையின்றி விற்பனை உஷார்

சென்னை, செப். 15

பூண்டு உண்பது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. தினமும் 2 பூண்டு பற்களை சாப்பிட்டு வந்தால் இதயத்துக்கு நல்லது என்று கூறப்படுகிறது. இதனால் உணவில் அன்றாடம் பூண்டை பயன்படுத்தும் பழக்கம் தமிழ்நாட்டில் அதிகம்.

இது தவிர ஊறுகாயாக தயாரித்தும் பயன்படுத்துகிறார்கள். எனவே பூண்டு விலை அதிகரித்தாலும் வியாபாரம் அமோகமாக நடக்கும்.



தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி ஆகிய மலை பிரதேசங்களில் அதிக அளவில் பூண்டு பயிரிடப்படுகிறது. கடந்த 6 மாதங்களாக இந்த பகுதியில் பருவமழை பொய்த்ததால் எதிர்பார்த்த அளவு பூண்டு மகசூல் இல்லை.

ஒரு ஏக்கர் நிலத்தில் 400 கிலோ பூண்டு மட்டுமே அறுவடை செய்யப்பட்டதாகவும் ஆனால் அதற்கான செலவு ரூ.3 லட்சம் என்றும் விவசாயிகள் கூறுகிறார்கள். அறுவடை செய்யப்பட்ட பூண்டை கிலோவுக்கு ரூ.340 என்று மொத்த வியாபாரியிடம் விற்பனை செய்ததாகவும் ஒன்றரை லட்சத்துக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயி ஒருவர் கூறி உள்ளார். இந்த பூண்டுகள் சில்லரை விலைக்கு கிலோ ரூ.450 முதல் ரூ.600 வரை விற்கிறது.

இப்போது பூண்டிலும் சீனாக்காரர்கள் ஊடுருவி இருக்கிறார்கள். சீனாவில் இருந்து கொண்டு வரப்படும் பூண்டுகள் குஜராத் வழியாக தமிழகத்துக்கு வருவதாககூறப்படுகிறது.

சீன பூண்டுகளை கிலோவுக்கு ரூ.200 முதல் ரூ.300க்குள் கொள்முதல் செய்து மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பதாக கூறுகிறார்கள்.

120 முதல் 150 டன் சீன பூண்டுகள் கண்டெய்னர்கள் மூலம் குஜராத் கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்பட்டிருப்பதாகவும் அதில் பெரமளவு தமிழகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பூண்டு விற்பனை அமோகமாக நடக்கிறது. இப்போது மலைப்பூண்டு வரத்து குறைந்து சீன பூண்டுகள் அதிகம் விற்கப்படுகிறது.

இந்த பூண்டுகள் உற்பத்தி செய்யப்படும்போது பூச்சி கொல்லி மருந்துகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால் அந்த பூண்டுகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் என்று கண்டறியப்பட்டு கடந்த 2014ம் ஆண்டிலேயே தடை செய்யப்பட்டு விட்டது.

இந்த நிலையில் இப்போது ரகசியமாக கடத்தி வருவதாககூறப்படுகிறது.

இது தொடர்பாக கோயம்பேடு மார்க்கெட் பூண்டு மொத்த வியாபாரி பாபு கூறியதாவது:

ஊட்டி பகுதியில் விளையும் பூண்டு லேசாக கருப்பு மற்றும் பிரவுனாக இருக்கும். புகை பூண்டு என்றும் சொல்வார்கள்.

இமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம் மாநிலங்களில் இருந்து வரும் பூண்டுகள் தூய வெண்மையாக இருப்பதால் மக்கள் அதையே விரும்பி வாங்குகிறார்கள்.

ஆனால் அங்கு விளைவிக்கப்படும் பூண்டுகளின் விதைப் பூண்டுகள் இங்கிருந்தே செல்கின்றன. ஊட்டி மற்றும் கொடைக்கானலில் விளையும் பூண்டுகள் வடுகப்பட்டி வழியாகவிதைக்காகஇமாச்சல் மற்றும் மத்திய பிரதேசத்துக்கு அனுப்பப்படுகிறது.

இமாச்சலில் இருந்து வரும் பூண்டுகள் மலைப் பூண்டு எனப்படும். இது தான் மருத்துவ குணம் உடையது. மத்திய பிரதேசத்தில் இருந்து வருவது நாட்டு பூண்டுகள் எனப்படும். கோயம்பேட்டில் தினமும் சராசரியாக 20 டன் பூண்டு விற்பனையாகிறது. முதல் ரகம் கிலோ ரூ.400 ஆகவும் குறைந்தது கிலோ ரூ.200க்கும் விற்கப்படுகிறது என்றார்.

# சுப்ரமணிய சாமி முருகன் கோவில் அருகே 2 கடைகள் தீப்பிடித்து எரிந்து சேதம்

சிங்காரப்பேட்டை, செப். 16

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரைகல்லாவி சாலை பகுதியில் உள்ள சுப்ரமணிய சாமி கோவில் அமைந்துள்ளது. அந்த கோவில் அருகே பூக்கடை, எலெக்டாரிக்கல் பொருட்கள் பழுது பார்க்கும் கடை, பேன்சி ஸ்டோர் கடைகள் என ஏராளமான கடைகள் செயல்பட்டு வருகின்றனர்.

இதில் கோவிலை யொட்டி அதே பகுதியைச் சேர்ந்த குமார் என்பவர் எலக்ட்ரிக்கல் பொருட்கள் பழுது பார்க்கும் கடை வைத்துள்ளார். அதன் அருகே ஜெயராமன் என்பவர் பேன்சி ஸ்டோர் கடை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் வழக்கம் போல் இன்று காலை 2 பேரும் கடைகளை திறந்து வைத்திருந்தனர். அப்போது திடீரென்று குமாரின் எலக்ட்ரிக்கல் பழுது பார்க்கும் கடையில் இருந்து புகை வெளியேறியது. இந்த புகை சிறிதுநேரத்தில்தீப்பிடிக்க ஆரம்பித்தது.



அப்போது குமாரின் கடையின் அருகில் உள்ள ஜெயராமனின் பேன்சி ஸ்டோர் கடையிலும் அந்த தீப்பற்றி கொண்டது. உடனே கடையில் இருந்து வெளியே குமாரும், ஜெயராமனும் ஊத்தங்கரை தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதில் தீ மளமளவென பரவி கடைகள் முழுவதும் பற்றி எரிந்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. அதற்குள் குமாரின் கடையில் இருந்த பழைய எலெக்ட்ரிக்கல் பொருட்களும், ஜெயராமன் கடையில் இருந்த பேன்சி பொருட்களும் முழுவதும் எரிந்து சேதமானது.

இந்த தீ விபத்தால், கோவிலுக்குள் சென்றவர்கள், அந்த பகுதியில் மற்ற கடைகளில் இருந்த பொதுமக்கள் பதறியடித்து அங்கிருந்து தப்பித்து ஓடினர்.

தகவலறிந்த ஊத்தங்கரை தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த ஊத்தங்கரை போலீசார் சம்பவ இடத்திற்கு நேரில் விரைந்து வந்து ஆய்வு செய்தனர். மேலும், தீவிபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து மின்கசிவால் தீப்பற்றி கொண்டதா? அல்லது வேறு யாரவாது தீ வைத்தனரா? என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த தீவிபத்து சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ரூ.1.50 லட்சத்துக்கு ஆண் குழந்தையை விற்ற தம்பதி... 4 பேரை பிடித்து போலீஸ் விசாரணை




மேலசொக்கநாதபுரம், செப். 15

தேனி மாவட்டம் வீரபாண்டி அருகே உள்ள உப்புக்கோட்டை முத்தாலம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சங்கர் (வயது 35). இவருக்கு திருமணமாகி குழந்தை இல்லாததால் முதல் மனைவி பிரிந்து சென்று விட்டார். இதனையடுத்து மனைவியின் தங்கை பாண்டீஸ்வரியை 2வது திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு கடந்த 1 மாதத்துக்கு முன்பு ஆண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தையை மதுரையைச் சேர்ந்த சிவக்குமார்உமா மகேஸ்வரி தம்பதிக்கு விற்று விட்டதாக தகவல் பரவியது. மேலும் கடந்த 2 நாட்களாக குழந்தையை விற்ற பணத்தில் சங்கர் அளவுக்கு அதிகமாக மது குடித்து வீட்டிலேயே அலப்பறை செய்து வந்துள்ளார்.

இது குறித்து சிறார் நலக்குழு மற்றும் வீரபாண்டி போலீசாருக்கு அப்பகுதி மக்கள் தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து போலீசார் மற்றும் சிறார் நலக்குழு களப்பணியாளர் வனராஜ் ஆகியோர் சங்கர் மற்றும் அவரது மனைவியிடம் விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள்முன்னுக்குப்பின் முரணான தகவல் தெரிவித்தனர். பிறந்த குழந்தை எங்கே என்று கேட்ட போது, தங்களால் குழந்தையை பராமரிக்க இயலாது என்பதால் மதுரையில் உள்ள தனது அண்ணன் வீட்டில் கொடுத்து வளர்க்க வைத்துள்ளதாக சங்கர் கூறினார்.

இருந்தபோதும் அவர்களது பேச்சில் நம்பிக்கை இல்லாமல் சங்கர் கூறிய விலாசத்தில் மதுரைக்கு விரைந்து சென்றனர். மதுரை அம்புஜம் நகரில் வசிக்கும் சிவக்குமார் (45) மற்றும் அவரது மனைவி உமா மகேஸ்வரி (35) ஆகியோரை போலீசார் வரவழைத்து விசாரித்தனர். அவர்களும் முறையான பதில் அளிக்காததால் சந்தேகம் வலுத்தது. இதனைத் தொடர்ந்து 4 பேரையும் பிடித்து பழனிசெட்டிபட்டி போலீஸ் நிலையத்துக்கு கொண்டு வந்தனர்.

குழந்தை கடத்தலுக்கு பயன்படுத்திய காரையும், போலீசார் கைப்பற்றி கொண்டு வந்தனர். தொடர்ந்து நடத்திய விசாரணையில் குழந்தை ரூ.1.50 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து போலீசார் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிவக்குமார் உமாமகேஸ்வரி தம்பதி வேறு யாரிடமாவது இது போல வறுமையில் உள்ள தம்பதியிடம் குழந்தையை வாங்கி விற்பனை செய்தார்களா? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தில் 2 நாட்கள் வெப்பம் சுட்டெரிக்கும் வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, செப். 15

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று மற்றும் நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

15ந்தேதி முதல் 19 ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் அடுத்த 2 தினங்களுக்கு (13.09.2024 மற்றும் 14.09.2024) அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2°3° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 3738° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு அந்த அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

# பள்ளி மாணவர்களுக்குள் தகராறு: 5ம் வகுப்பு மாணவனை சரமாரியாக தாக்கிய பெண் கைது

நெல்லை, செப். 15

நெல்லை மாவட்டம் முன்னீர்பள்ளம் அருகே உள்ள தருவையை சேர்ந்தவர் ஜோதி கிளி. தொழிலாளி. இவரது மனைவி இசக்கிராணி. இவர்களது மகன் தருவையில் உள்ள அரசு பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வருகிறான்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு பள்ளியில் இந்த மாணவனுக்கும், சக மாணவனுக்கும் இடையே சிறு பிரச்சனை ஏற்பட்டு அவர்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதில் சக மாணவர் தன்னை தாக்கியதாக ஜோதிகிளியின் மகன் தனது பெற்றோரிடம் கூறி உள்ளார். அதைக் கேட்டு ஆத்திரமடைந்த ஜோதி கிளி நேராக தனது மகனை தாக்கிய சக மாணவனை பிடித்து சரமாரியாக தாக்கியுள்ளார். தொடர்ந்து ஜோதி கிளியின் மனைவி இசக்கிராணியும் சிறுவனை தாக்கியுள்ளார். இதில் காயமடைந்த சிறுவன் நெல்லை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறான்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக ஊர் பெரியவர்கள் பேசி இருதரப்பினரையும் சமாதானம் செய்து வைத்தனர்.

இந்நிலையில் சிறுவன் தாக்கப்படும் காட்சிகள் அந்த பகுதியில் உள்ளவர்களால் வீடியோ எடுக்கப்பட்டு சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இதையடுத்து முன்னீர்பள்ளம் போலீசார் காயம் அடைந்த மாணவனின் தாயாரிடம் புகார் மனு பெற்று சிறுவனை தாக்கிய ஜோதி கிளி மற்றும் அவரது மனைவி இசக்கிராணி ஆகியோர் மீது சிறுவனையும், அவனது தாயாரையும் அவதூறாக பேசி, கொலை மிரட்டல் கொடுத்ததாகவும், சிறுவனை தாக்கியதாகவும் கூறி இந்திய தண்டனைச் சட்டம் 294 பி, 323, 506 (2), பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து இசக்கி ராணியை கைது செய்தனர். தலைமுறைவான ஜோதி கிளியை வலைவீசி தேடி வருகின்றனர்.

# அரசு பஸ்சில் பெண் பயணியிடம் நகை திருட்டு: போலீசார் விசாரணை

திண்டிவனம், செப். 15

சீர்காழி அடுத்த திருவெண்காடு பகுதி சேர்ந்தவர் ராஜன் இவரது மனைவி மெர்லின் (27). இவர் தனது இரு கை குழந்தைகளுடன் கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது தாய் வீடான சென்னையில் நடைபெற்ற சுப நிகழ்ச்சிக்கு கலந்து கொண்ட பின் நேற்று முன்தினம் தனது சகோதரர் வசந்த் (19) மற்றும் தனது இரு கை குழந்தைகளையும் அழைத்து கொண்டு அரசு பஸ்சில் சீர்காழிக்கு திரும்பி கொண்டு இருந்தார்.

சுப நிகழ்ச்சியில் தான் அணிந்திருந்த நெக்லஸ் கம்மல் மற்றும் தனது குழந்தைகள் அணிந்திருந்த பிரேஸ்லெட், மோதிரம் உள்ளிட்ட சுமார் 6 பவுன் தங்க நகைகளை ஒருநகை பெட்டியில் வைத்து தனது கைப்பையில் வைத்திருந்தார். பஸ் விக்கிரவாண்டி சுங்கச்சாவடியை கடக்கும் பொழுது தனது குழந்தைக்கு பால் பாட்டில் எடுப்பதற்காக தனது கைப்பையை திறந்த போது அதிலிருந்து நகை பெட்டி காணாமல் போய் இருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

பஸ் டிரைவர் அவர்களை அங்கு இறக்கி விடாமல் பஸ் வழியில் எங்கும் நிற்காது. அடுத்ததாக பண்ருட்டியில் தான் நிற்கும் எனக் கூறி பண்ருட்டிக்கு அவர்களை அழைத்துச் சென்று அங்கிருந்த போலீஸ் நிலையத்தில் தங்க நகைகள் திருடப்பட்ட தகவலை தெரிவித்தனர். தகவலின் பேரில் பஸ்சில் இருந்த பயணிகளிடம் பண்ருட்டி போலீசார் சோதனை நடத்தினர். ஆனால் நகைகள் கிடைக்காததால் அதற்கு முன்பு பஸ் நிறுத்தப்பட்ட இடத்தை போலீசார் விசாரித்தனர். விசாரித்ததில் இதற்கு முன்பாக திண்டிவனம் பஸ் நிலையத்தில் நின்ற போது 4 பயணிகள் மட்டுமே கீழ இறங்கினர் என தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து பண்ருட்டி போலீசார் பெண் பயணியிடம் திண்டிவனம் போலீஸ் நிலையத்திற்கு சென்று அங்கு புகார் அளிக்குமாறு அவர்களைஅங்கிருந்துஅனுப்பி வைத்தனர். காலை 7 மணிக்கு நகைகளை பறிகொடுத்த அந்த பெண் பயணி நண்பகல் 1 மணியளவில் திண்டிவனம் போலீஸ் நிலையத்திற்கு வந்தடைந்தார். அதனை தொடர்ந்து அந்த பயணி தான் பறிகொடுத்த நகைகள் விபரங்களை திண்டிவனம்போலீஸ்நிலையத்தில் தெரிவித்து புகார் அளித்துச் சென்றார்.

விக்கிரவாண்டி டோல் கேட்டில் நகைகளை பறிகொடுத்த இடத்தில்பெண் பயணியை இறக்கி விட்டிருந்தால் அங்கிருந்த விக்கிரவாண்டி போலீஸ் நிலையத்தில் அவர் நடந்த விபரங்களை தெரிவித்து இருப்பார். ஆனால் பஸ் டிவைரோ பஸ் வழியில் எங்கும் நிற்காது என்று கூறி மனிதாபிமானம் அற்ற முறையில் அவரை அங்கிருந்து பண்ருட்டியில் இறக்கி விட்டு சென்றுள்ளார். இதுபோல மனிதாபிமானம் அற்ற முறையில் பணிபுரியும் அரசு பஸ் டிரைவர்மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலரும் பொதுமக்களும் கோரிக்கை வைக்கின்றனர்.

# சென்னையில் பருவமழைக்கு முன்பாக 388 அம்மா உணவகங்களை புதுப்பிக்க திட்டம்




சென்னை, செப். 15

சென்னை மாநகராட்சி மூலம் 388 அம்மா உணவகங்கள் செயல்படுகின்றன. மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்ட இந்த உணவகங்கள் செயல்படும் கட்டிடங்கள் சேதம் அடைந்துள்ளன.

பாத்திரங்கள், கிரைண்டர், மிக்சி போன்றவை ரிப்பேர் ஆகி கிடக்கின்றன. இதனால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றனர்.

இந்த நிலையில் அம்மா உணவகங்களை சீரமைக்கவும், உடைந்து போன பாத்திரங்களை மாற்றவும் மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

388 அம்மா உணவகங்களுக்கும் பாத்திரங்கள் மற்றும் சமையல் அறை உள்ளிட்டவற்றை சரி செய்ய ரூ.7 கோடியே 6 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அம்மா உணவகத்திற்கும் தலா ரூ.2 லட்சம் வீதம் செலவிடப்பட உள்ளது.

என்னென்ன பாத்திரங்கள் புதிதாக வாங்க வேண்டும் என்பது குறித்து கணக்கெடுக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல கட்டிடங்களையும் பழுது பார்க்க ஆய்வு செய்யும் பணி நடந்தது. அம்மா உணவகங்கள் செயல்படும் கட்டிடங்களை சீரமைக்கும் வகையில் கணக்கெடுக்கப்பட்டது. அதில் இதுவரையில் 300 அம்மா உணவக கட்டிடங்களை சீரமைக்க கடிதம் பெறப்பட்டுள்ளது.

# தொண்டாமுத்தூர் அருகே யானை தாக்கி வாலிபர் உயிரிழப்பு



வடவள்ளி, செப். 16

கோவை மாவட்டம் நரசீபுரம், ஓணாப்பாளையம், மதுக்கரை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஒன்றரை மாதமாகவே ஒற்றை காட்டு யானை ஒன்று சுற்றி வருகிறது.

குடியிருப்புக்குள்புகும் யானை, வீடுகளை சேதப்படுத்துவது, தோட்டத்திற்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்வது, மக்களை தாக்குவது என தொடர்ந்து அட்டகாசத்தில் ஈடுபட்டு வருவது தொடர்கதையாக உள்ளது. யானை நடமாட்டம் உள்ளதால் மக்கள் வெளியில் நடமாடவே அச்சப்படுகின்றனர்.

தொண்டாமுத்தூர் அடுத்தகெம்பனூர்அருகே அட்டுக்கல் என்ற மலைக் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தை சேர்ந்தவர் தேவராஜ் (வயது34). இவர் கூலித்தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார்.

இன்றுகாலை 7 மணிக்கு அவர் இயற்கை உபாதை கழிப்பதற்காக அருகே உள்ள புளியந்தோப்பு என்ற பகுதிக்கு சென்றார்.

அப்போதுஅங்குமறைந்திருந்த ஒற்றை யானை, தேவராஜை தாக்கி தூக்கி வீசியது. மேலும் காலால் மிதித்தும் கொன்றது. இதில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

சத்தம் கேட்டு, மக்கள் அங்கு ஓடி வந்தனர். அதற்குள் யானை அங்கிருந்து சென்று விட்டது. இதுகுறித்து வனத்துறையினர் மற்றும் தொண்டாமுத்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் அறிந்ததும் தொண்டாமுத்தூர் போலீசாரும், வனத்துறையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அவர்கள் இறந்தவரின் உடலை பார்வையிட்டு, அந்த பகுதியில் யானை நடமாட்டத்தையும் கண்காணித்தனர். மேலும் இறந்தவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பகுதியில் ஒற்றை யானை நடமாட்டம் அதிகமாக உள்ளது. இந்த யானையை அடர்ந்த வனத்திற்குள் விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். யானை பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிதியமைச்சரிடம் தொழிலதிபர் மன்னிப்பு கேட்ட விவகாரம்: வானதி சீனிவாசன் விளக்கம்

சென்னை, செப். 15

கோவை கொடிசியாவில் தொழில் முனைவோர்களுடன் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆலோசனை நடத்தினார். அப்போது ஸ்ரீ அன்னபூர்ணா உணவகத்தின் நிர்வாக இயக்குநர் சீனிவாசன் பேசுகையில், "இனிப்புக்கு 5 சதவீதம் ஜி.எஸ்.டி. இருக்கிறது. ஆனால் காரத்துக்கு 12 சதவீதம் இருக்கிறது. இந்த முரண்பாடு களையப்பட வேண்டும். அதே போல, Bunக்குஜி.எஸ்.டி. இல்ல.. அதுக்குள்ள வைக்குற க்ரீமுக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி.. வாடிக்கையாளர் சொல்றாரு.. க்ரீமை கொண்டு வா.. நானே வச்சிக்கிறேன்னு சொல்றாரு... கடை நடத்த முடியல மேடம்... ஒரே மாதிரி வையுங்கள். ஒரு குடும்பத்துக்கு பில் போடணும்னா கம்யூட்டரே திணறுது மேடம்.." என்று தனது ஆதங்கத்தை தெரிவித்தார். சீனிவாசன் பேசியது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இதையடுத்து, ஜி.எஸ்.டி. குறித்து தனது ஆதங்கத்தை தெரிவித்த அன்னபூர்ணா சீனிவாசன், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் மன்னிப்பு கேட்டதாக சமூக வலைத்தளங்களில் வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது. இதற்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி, காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி, பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் செயல்பட்டாளர் சுந்தரராஜன், கேரள காங்கிரசார் மற்றும் பலர் கண்டனங்களை தெரிவித்தனர்.

இந்நிலையில், அன்னபூர்ணா உணவகத்தின் நிர்வாக இயக்குநர் மத்திய நிதி அமைச்சரிடம் மன்னிப்பு கேட்ட விவகாரம் சர்ச்சையான நிலையில், பா.ஜ.க. எம்.எல்ஏ. வானதி சீனிவாசன் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

★ அன்னபூர்ணா ஓட்டலுக்கு சென்று நான் ஜிலேபி சாப்பிட்டு பிரச்சனை செய்ததாக சீனிவாசன் கூறினார். நான் இது வரை அன்னபூர்ணா ஓட்டலில் ஜிலேபி சாப்பிட்டதோ, பிரச்சனையில் ஈடுபட்டதோ இல்லை.

★ மறுநாள் காலையில் இருந்து அவர் (சீனிவாசன்) எனக்கு தொடர்ச்சியாக போன் செய்தார். நான் தப்பாக பேசிவிட்டேன். மத்திய மந்திரியிடம் மன்னிப்பு கேட்பதற்கு நேரம் கொடுங்கள் என்று கேட்டார்.

★ ஓட்டலுக்கு வந்த சீனிவாசன், நான் பேசியது தவறு, தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிட்டேன். உங்கள் மனது புண்பட்டிருந்தால் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அவர் தாமாக முன் வந்து மன்னிப்புக் கேட்டார்.

★ தான் பேசியதை இணையத்தில் வேறுமாதிரி பரவிடுச்சி. நான் ஆர்.எஸ்.எஸ். சார்ந்தவர் என்று சொல்லி குடும்பத்தை பற்றி எல்லாம் பேசினார்.

இவ்வாறு வானதி சீனிவாசன் கூறினார்.

# அன்னபூர்ணா உரிமையாளர் பேசியது சத்தியமான உண்மை: சீமான் காட்டம்

சென்னை, செப். 16

ஜி.எஸ்.டி. குறித்து தனது ஆதங்கத்தை தெரிவித்த அன்னபூர்ணா உரிமையாளர் சீனிவாசன், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் மன்னிப்பு கேட்டதாக சமூக வலைத்தளங்களில் தற்போது வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக அரசியல் தலைவர்கள் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ மதுவை ஒழிக்கட்டும். திமுக வெல்லட்டும்.

★ மதுவிற்கு எதிராக நீண்ட காலமாக போராடுபவர் எங்கள் ஐயா ராமதாஸ். அவரை மது ஒழிப்பு மாநாட்டிற்கு அழைக்க வேண்டும். ஆனால் என்னை மாநாட்டிற்கு அழைக்கவில்லை.

★ 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடு வந்ததாகவும், 31 லட்சம் பேருக்கு வேலை கொடுத்ததாகவும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சொல்கிறார். இதற்கு முதல்வரும் ஆமாம் என்று சொல்கிறார். இதை நீங்கள் நம்புகிறீர்களா?

★ மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் அன்னபூர்ணா உரிமையாளர் பேசியது சத்தியமான உண்மை.

★ அன்னபூர்ணா ஓட்டல் உரிமையாளர் மன்னிப்பு கேட்டாலும் பேசிய உண்மை மாறாது.

★ அவர் கேட்ட கேள்வி நாடெங்கும் பரவிடுச்சு, அதை அதிகாரம் வந்து பணிய வைக்குது. அவர் எவ்வளவு தான் வருத்தம் தெரிவிச்சாலும் அந்த கேள்வியில் உள்ள உண்மையை சத்தியத்தை யாராலும் மறைக்க முடியாது என்று அவர் கூறினார்.

# 4 வழி சாலை பணிகளை மத்திய மந்திரி நிதின் கட்கரி ஆய்வு

கும்பகோணம், செப். 15

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை மந்திரி நிதின் கட்கரி நாக்பூரில் இருந்து விமானம் மூலம் திருச்சி வந்து பின்னர் அங்கிருந்து ஹெலிபேட் மூலம் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் கலைக் கல்லூரி மைதானத்திற்கு வந்தார்.

அவரை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். மேலும் எம்.பி.க்கள் கல்யாணசுந்தரம், சுதா, பா.ஜனதா நிர்வாகிகள் பொன்.ராதாகிருஷ்ணன், கருப்பு முருகானந்தம் ஆகியோரும் வரவேற்றனர்.

இதையடுத்து மத்திய மந்திரி நிதின்கட்கரி கும்பகோணம் ஜெகநாதப்பெருமாள் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் விக்கிரவாண்டி 4 வழி சாலை பணிகள் முடிந்துள்ள விவரங்களை அறியதஞ்சாவூரில்இருந்து சோழபுரம் வரையிலான சாலை பணிகளை ஆய்வு செய்தார். அப்போது சாலை பணிகள் முடிந்துள்ள விவரங்கள் உள்ளிட்ட பலவற்றை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து ஹெலிகாப்டர் மூலம் சோழபுரத்திலிருந்து சேத்தியாத்தோப்பு பகுதி வரை 4வழிசாலைதிட்டங்களின் நிலை குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளை முடித்து கொண்டு திருச்சி சென்று விமானம் மூலம் நாக்பூர் செல்கிறார்.

மத்திய மந்திரி வருகையை முன்னிட்டு போலீஸ் சூப்பிரண்டு ஆஷிஷ்ராவத் தலைமையில் பலத்த போலீஸ் பாது காப்பு போடப்பட்டு இருந்தது.


# அணையின் நுழைவாயில் இரும்பு கதவை சேதப்படுத்திய காட்டுயானை

டி.என்.பாளையம், செப். 15

ஈரோடு மாவட்டம் டி. என்.பாளையம் அருகே யுள்ள கொங்கர்பாளையம் கிராமத்தில் வனப்பகுதி யையொட்டி அமைந்துள் ளது குண்டேரிப்பள்ளம் அணை. இந்த அணையின் மொத்த நீர்மட்டம் 42 அடி யாகும். தற்போது அணை நிரம்பி வழியும் தருவாயில் உள்ளது. அணையின்மூலம் 2498 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

இந்த அணைக்கு நீர்வரத் தானது குன்றி உட்பட அடர்ந்த வனப்பகுதியில் பெய்யும் மழையால் குண் டேரிப்பள்ளம் அணை நிரப் பப்பட்டு இங்கு கட்லா, லோகு, சிலேப்பி உள்ளிட்ட மீன் குஞ்சுகள் விடப்பட்டு பெரிதானதும் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மூலிகைகள் நிறைந்த அடர்ந்த வனப்பகுதியில் இருந்து வரும் நீரால் இந்த மீன்கள் வளர்வதால் ஆரோக்கியத்துட னும், சுவையாகவும் இருப்பதால் உள்ளூர் மற்றும் பிற மாவட் டங்களில் இருந்தும் பொதுமக்கள் குண் டேரிப்பள்ளம் மீன் களை வாங்கி செல் வது வழக்கம்.



மேலும் பண்டிகை காலங்களில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து குண்டேரிப்பள்ளம் அணையை சுற்றி பார்க்க சுற்றுலா பயணிகள் வருவர். அப்படி குண்டேரி ப்பள் ளம் அணைக்கு வரும் பொது மக்கள் உணவு பொட்டலங்கள், பழவகை கள், எளிதில் மக்காத பிளாஸ்டிக் பொருட்கள், தண்ணீர் பாட்டில்கள் கொண்டு வந்து மீதமா வதை அணைக்கு உள்ளும் அணையை ஒட்டிய பகுதி யில் வீசி செல்கின்றனர்.

பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவு பொருட்களை சுற்றுலா பயணிகள் குண்டே ரிப்பள்ளம் அணையில் வீசி செல்வதால் அணையின் நீர் மாசுபட்டு மீன்கள் பிளாஸ் டிக் கழிவுகளை உண்டு இறக்க வாய்ப்பு உள்ளதால் சில வருடங்களுக்கு முன்பு அணையின் இருபுறம் முள் வேலி அமைக்கப்பட்டு நுழைவாயிலில் இரும்பு கதவு போடப்பட்டது.

இந்த நிலையில் சம்பவத் தன்று இரவு வனப்பகுதி யில் இருந்து வெளியேறி காட்டுயானை அணையின் நடைபாதை வழியாக வந்த நுழை வாயிலில் அமைக் கப்பட்ட இரும்பு கதவை உடைத்து நொறுக்கி தாறுமாறாக வீசி சென்றது.

குண்டேரிப்பள் ளம் அணை வனத் தையொட்டியே அமைந்துள்ளதால் யானை உள்ளிட்ட வன விலங்குகள் அணையின் தண் ணீர் உள்ள பகுதி யில் வந்த தண்ணீர் குடித்து விட்டு செல்வது வழக்கம்.

ஆனால் அன்று இரவு யானை இரும்பு கதவை உடைத்து சேதப்படுத்திய சம்பவம் சுற்றுலா பயணிக ளிடத்தில் அச்சத்தையும் பர பரப்பை ஏற்படுத்தியுள் ளது. சுற்றுலா பயணிக ளுக்கு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொதுப் பணித்துறை மற்றும் டி.என். பாளையம் வனத்துறையி னர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொது மக்களின் கோரிக் கையாக உள்ளது.

# மகா விஷ்ணு கைது நடவடிக்கை பின்னணியில் சதி உள்ளது அர்ஜூன் சம்பத் குற்றச்சாட்டு





சென்னை, செப். 15

சென்னை அசோக்நகர் பெண்கள் பள்ளி மற்றும் சைதாப்பேட்டை பள்ளி யில் சர்ச்சைக்குரிய வகை யில் பேசிய வழக்கில் மகா விஷ்ணு கைது செய்யப் பட்டு உள்ளார்.

இந்த நிலையில் அசோக் நகர் பள்ளிக்கு இந்து மக் கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜூன் சம்பத் நேரில் செல்ல இருப்பதாக தகவல் பரவியது. இதைய டுத்து அங்கு போலீசாரும் குவிக்கப்பட்டனர். காலை 10.30 மணியளவில் அர் ஜூன் சம்பத் அசோக் நகர் பள்ளிக்கு நேரில் சென் றார்.

ஆனால் அவர் உள்ளே அனுமதிக்கப்பட வில்லை. இதைத் தொடர்ந்து பள்ளிக்கூட வாசலில் வைத்து அர் ஜூன்சம்பத்நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப் போது அவர் கூறியதாவது:

பள்ளி மாணவமாணவி கள் மத்தியில் பேசிய மகா விஷ்ணுவை பயங்கரவா தியை போல கைது செய் துள்ளனர். கிறிஸ்தவ மற் றும் இஸ்லாமிய கல்வி நிறுவனங்களில் நடைபெ றும் உபதேசங்களை யாரும் கண்டு கொள்வது இல்லை.

ஆனால் திருவள்ளூர் பற்றி பேசிய மகா விஷ் ணுவை 250 போலீசார் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர். மாற்றுத்தி றனாளி ஆசிரியரை மகா விஷ்ணு அவமதித்துவிட் டதாக குற்றம் சாட்டியுள் ளனர்.

அசோக்நகர் பள்ளி கல் வியில் சிறந்த பள்ளியா கும். அந்த பள்ளியின் புகழை கெடுக்க வேண் டும் என்ற எண்ணத்தில் அருகில் உள்ள சில தனி யார் பள்ளிகள் திட்டம் தீட் டியுள்ளன. மகா விஷ்ணு கைது நடவடிக்கையில் சதி நடந்து உள்ளது. இதனை சட்ட ரீதியாக எதிர்கொள்ள முடிவு செய் துள்ளோம்.

அசோக் நகர் பள்ளிக்கு சென்று நடந்தது என்ன? என்பது பற்றி கேட்டறிய லாம் என்பதற்காகவே சென்றேன். ஆனால் உள்ளே செல்வதற்கு பள்ளி நிர்வாகம் அனுமதி மறுத்ததால் திரும்பி வந்து விட்டேன். இவ்வாறு அவர் கூறினார்.

# திருமங்கலம் அருகே பிரியாணி சாப்பிட்ட 39 பேருக்கு வாந்தி, மயக்கம்

விருதுநகர்: செப். 15

மதுரை மாவட்டம் திரு மங்கலம் அருகே கள்ளிக் குடியை அடுத்துள்ள வில் லூரில் தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் கட் சியின்முக்கியநிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிந்த பின் நிர் வாகிகளுக்கு சிக்கன் மற் றும் மட்டன் பிரியாணி உணவு வழங்கப்பட்டது. சிலர் கூட்டம் நடந்த இடத் தில் சாப்பிட்டனர். பலர் வீட்டிற்கு கொண்டு சென்று குடும்பத்துடன் சாப்பிட்டனர்.

பிரியாணி சாப்பிட்ட சிறிது நேரத்தில் 50க்கும் மேற்பட்டோருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட் டது.



17 பெண்கள், குழந்தை கள் உள்பட 39 பேருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட் டது. இதனால் அதிர்ச்சிய டைந்த உறவினர்கள் பாதிக்கப்பட்ட 39 பேரை விருதுநகர் அரசு ஆஸ்பத் திரியில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதுகுறித்துதகவலறிந்த மாவட்ட போலீஸ் சூப்பி ரண்டு கண்ணன் மற்றும் அதிகாரிகள் அரசு ஆஸ்பத் திரிக்கு சென்று பாதிக்கப் பட்டவர்களிடம் விசா ரணை நடத்தினர்.

தி.மு.க. பொதுக் கூட் டத்தில் வழங்கப்பட்ட பிரியாணி சாப்பிட்ட கட்சி யினரும், அவர்களது குடும்பத்தினரும் ஆஸ்பத் திரியில் சேர்க்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத் தியது.

பொதுக்கூட்டத்தில் விநியோகம் செய்யப் பட்ட பிரியாணி தரம் குறைந்து இருந்ததால் கெட்டுபோன இறைச்சி சேர்க்கப்பட்டதா? என தெரியவில்லை. இது தொடர்பாக உரிய விசா ரணை நடத்த வேண்டும் என தி.மு.க.வினர் கோரிக்கை வைத்துள்ள னர்.

# கேரள வியாபாரிகள் வருகை குறைந்ததால் நேந்திரன் வாழைத்தார் விலை வீழ்ச்சி... விவசாயிகள் வேதனை

மேட்டுப்பாளையம், செப். 15

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் கார மடை, சிறுமுகை உள் ளிட்ட பகுதிகளில் வாழை விவசாயம் பிரதான தொழி லாக உள்ளது.

இங்கு விளைவிக்கப்படும் நேந் திரன், செவ்வாழை, ரஸ் தாளி, ரோபஸ்டா வாழை ரகங்கள் தமிழகம் மட்டு மின்றி அண்டை மாநிலங் களுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படு கின்றன. குறிப்பாக நேந்தி ரன் வாழைத்தார் சுமார் 80 சதவீதம் வரை கேரள வியாபாரிகளால் வாங்கி செல்லப்படுகிறது.

சுற்றுவட்டார பகுதிக ளில் விளைவிக்கப்படும் வாழைத்தார்கள், மேட் டுப்பாளையம் நால்ரோடு



பகுதியில் செயல்படும் ஏலமையத்துக்குகொண்டு வரப்பட்டு, ஏலம் மூலம் விலை நிர்ணயம் செய்யப் பட்டு மொத்த வியாபாரிகளுக்கு விற் பனை செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் கேரளா வில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு இங்குள்ள வாழை விவசாயிகள் நேந் திரன் வாழையை அதிகள வில் பயிரிடுவது வழக் கம்.

இந்தநிலையில் சமீபத் தில் கேரளாவின் வயநாடு பகுதியில் ஏற்பட்ட நிலச்ச ரிவு உயிரிழப்புகளால் இந்த ஆண்டு ஓணம் பண் டிகை கொண்டாட்டங் களை கேரள அரசு ரத்து செய்துள்ளது.

இதனால் மேட்டுப்பா ளையம் ஏல மையங்க ளுக்கு கேரள வியாபாரிகளின் வருகை வெகுவாக குறைந்து நேந் திரன் வாழைத்தார்கள் தேக்கம் அடைந்துள்ளன.

இது குறித்து விவசாயிகள்கூறும்போது, வழக்கமாக ஓணம் பண் டிகை காலத்தில் போட்டி போட்டுக்கொண்டு நேந் திரன் வாழைத்தார்களை வாங்கி செல்லும் கேரள வியாபாரிகள் வராததால் வாழைத்தார்கள் தேங்கி விலை வீழ்ச்சி அடைந் துள்ளது. ஓணம் பண்டிகை மாதத்தில் ஒரு கிலோ நேந் திரன் வாழைத்தார் ரூ.45 முதல் ரூ.55 வரை விலை போகும்நிலையில், தற் போது கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை மட்டுமே விலை கிடைக்கிறது என்ற னர்.

## தேவரா படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கிய தணிக்கை குழு

நடிகர் ஜூனியர் என்.டி.ஆர் இயக்குநர் கொரட்டலா சிவா இயக்கத்தில் 'தேவரா பாகம் 1 படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் பாலிவுட் நடிகை ஜான்வி கபூர் நாயகி யாக நடித்துள்ளார். இதன்மூலம் அவர் தென்னிந்திய சினிமாவில் நடிகையாக கால் பதிக்கிறார்.





இப்படத்தில் பிரகாஷ்ராஜ், சயிஃப் அலிகான் முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக் கின்றனர். படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படம் பான் இந்தியன் திரைப் படமாக உருவாகியுள்ளது. இத்திரைப்படத்தில் ஜூனியர் என்.டி.ஆர் இரு வேடங்க ளில் நடித்துள்ளார். படத்தின் முதல் பாடலான ஃபியர் சாங் மற்றும் சுத்தமல்லி சமீபத்தில் வெளியாகி மக்களிடையே வரவேற்பை பெற்றது. இப்படம் வருகிற செப் டம்பர் 27 ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

படத்தின் 3 வது பாடலான தாவூதி பாடல் சமீபத்தில் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் டிரைலர் வரும் செப்டம்பர் 10 ஆம் தேதி வெளி யானது. இந்நிலையில், தேவரா படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

படத்தை பார்த்தை சென்சார் அதிகாரிகள் நான்கு காட்சிகளை நீக்குமாறு தெரிவித் துள்ளனராம். அதிகப்படியான வன்முறை காட்சிகள் இடம்பிடித்திருப்பதால் அவற்றை நீக்குமாறு கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த படத்தின் ரன்னிங் டைம் 2 மணி நேரம் 58 நிமிடங்கள் என இருக்கும் என கூறப்பட்டுள்ளது.

## என்னை பொருத்தவரை இதுதான் நல்ல படம் இயக்குநர் ஹெச் வினோத்



இரா எண்டர்டெயின்மென்ட் தயாரிப்பில், டிரைடென்ட் ஆர்ட்ஸ் ரவீந் திரன் வெளியிடும் புதிய படம் நந்தன். இயக்குநர் இரா சரவணன் இயக் கத்தில், சசிகுமார் நடிப்பில் மாறுபட்ட களத்தில், மக்களின் அடிப்படை அரசியலை பேசும் சமூக அக்கறை மிக்க படைப்பாக இந்த படம் உருவா கியுள்ளது. இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சமீ பத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இயக்குநர் எச் வினோத், "நண்பர் இரா. சரவணன் இப்படத்தை பார்க்க சொல்லி, கடந்த சில மாதங்களாக என்னை கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் நான் தவிர்த்துக் கொண்டே இருந்தேன்" "அவரது முந்தைய படம் 'உடன்பி றப்பே' மிகவும் மிகவும் எமோஷனலான படம், அதனால் அவர் படமே வேண்டாம் என, தவிர்த்து வந்தேன். ஆனால் ஒரு கட்டத்தில் நண்பர்க ளுடன் இந்த திரைப்படத்தை பார்த்தேன். படம் ஆரம்பித்த பத்து நிமிடத்திற்கு பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே இழுத்துக் கொண்டது." "நான் கிராமத்திலேயே வளர்ந்து இருந்தாலும், இந்த படம் எனக்கு மிகப்பெரும் அதிர்ச்சியாக தான் இருந்தது. என்னைப் பொறுத்தவரை எது நல்ல படம் என்றால், ஒரு மனிதனை இன்னும் கொஞ் சமாவது நல்லவனாக மாற்ற முயற்சிக்கும் சினிமா தான் நல்ல சினிமா என்பேன். அந்த வகையில், இந்த திரைப்ப டம் மனிதனின் மனதை மாற்றும் சினிமாவாக இருக்கிறது." "சசிகுமார் பொருட்காட்சியில் வைக்கும் அளவு, சிறந்த மனிதர் என்பதாலோ, சரவணன் பத்திரிக்கை துறையில் இருந்து வந்திருக்கிறார் என்பதாலோ, இதை சொல்ல வில்லை, உண்மையிலேயே இது சிறந்த திரைப்படம்," என்று தெரிவித்தார்.

## விராட் கோலியுடன் செல்பி எடுத்த ராதிகா சரத்குமார் வைரலாகும் புகைப்படம்

இந்தியா வங்கதேசம் அணிகள் டெஸ்ட் மற்றும் டி20 தொடரில் மோத உள்ளது. இரு அணிகளுக்கு இடையே யான முதல் டெஸ்ட் போட்டி வருகிற 19ந் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தொடங்க உள்ளது. இந்த போட்டிக்காக இந்திய அணி சென்னைக்கு வந்துள்ளது.



இந்நிலையில் விமான பயனத்தின்போது விராட் கோலியை சந்தித்து அவருடன் நடிகை ராதிகா சரத்குமார் செல்பி எடுத்துக் கொண்டார். இது தொடர்பாக ராதிகா சரத்குமாரின் எக்ஸ் தள பதிவில், "இலட்சக்கணக்கான மக் களின் அன்புக்குரிய விராட் கோலியை லண்டனிலிருந்து சென்னை திரும்பும்போது சந்தித்ததில் மகிழ்ச்சி. சென் னையில்தான் விளையாடவுள்ளேன் என்றார். அவர் வெற்றி பெற வாழ்த்தினேன். செல்ஃபிக்கு நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## 2வது டி20 : ஜேக் பிரேசர் அரைசதம் : ஆஸ்திரேலியா 193 ரன்கள் குவிப்பு



ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் டி20 போட்டியில் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 2வது டி20 போட்டி இன்றுநடைபெற்று வருகிறது டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சைதேர்வுசெய்தது. அதன்படி, முதலில்களமிறங்கியஆஸ்திரேலியா அணி அதிரடியாக விளையாடியது.

தொடக்க ஆட்டக்காரர் டிராவிஸ் ஹெட் 14 பந்தில் 31 ரன்கள் எடுத்து அவுட்டானார். முதல் விக்கெட்டுக்கு மேத்யூ ஷாட்ஹெட் ஜோடி 52 ரன்களை சேர்த்தது. ஷாட் 28 ரன்னில் ஆட்டமிழ்ந்தார். அடுத்து ஜேக் பிரேசர் அதிரடியாக ஆடி அரை சதமடித்து வெளியேறினார். பொறுப்புடன் ஆடிய ஜோஷ் இங்கிலிஸ் 42 ரன்னில் ஆட்டமிழந்தார். இறுதியில், ஆஸ்திரேலியா அணி 20 ஓவரில் 193 ரன்கள் குவித்தது. இங்கிலாந்து சார்பில் லிவிங்ஸ்டோன், பிரிடோன் கார்ஸ் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 194 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து விளையாடி வருகிறது .

## துலீப் கோப்பை: கெய்க்வாட் தலைமையிலான இந்தியா சி அணி 525 ரன்களில் ஆல் அவுட்



இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டெஸ்ட் தொடரான துலீப் கோப்பையின் 2வது சுற்று ஆட்டங்கள் நேற்று தொடங்கின. இதில் கெய்க்வாட் தலைமையிலான இந்தியா சி அணி, அபிமன்யூ ஈஸ்வரன் தலைமையிலான இந்தியா பி அணியை எதிர்கொண்டுள்ளது. இதில் டாஸ் வென்ற இந்தியா பி அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்தியா சி அணி முதல் இன்னிங்சில் 525 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக இஷான் கிஷன் 111 ரன்கள் குவித்தார். இந்தியா பி தரப்பில் முகேஷ் குமார் மற்றும் ராகுல் சஹார் தலா 4 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா பி அணி 2வது நாளில் விக்கெட் இழப்பின்றி 124 ரன்கள் அடித்துள்ளது. ஜெகதீசன் 67 ரன்களுடனும், அபிமன்யூ ஈஸ்வரன் 51 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இதன்மற்றொருஆட்டத்தில்அகர்வால்தலைமையிலான இந்தியா ஏ அணி, ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான இந்தியா டி அணியுடன் விளையாடி வருகிறது. இதில் முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய இந்தியா ஏ முதல் இன்னிங்சில் 290 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனையடுத்து முதல் இன்னிங்சை விளையாடிய இந்தியா டி 183 ரன்களில் ஆல் அவுட் ஆனது. பின்னர் 107 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா ஏ 2வது நாளில் 1 விக்கெட்டை இழந்து 115 ரன்கள் அடித்துள்ளது.

## என்னுடைய மகன் அசாம் கான் அணியிலிருந்து நீக்கப்பட அவர்தான் காரணம் பாக்.முன்னாள் வீரர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான மொயின் கான் அந்த அணியின் சிறந்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன்களில் ஒருவராக திகழ்ந்தவர். அவருடைய மகன் அசாம் கான் கடந்த 2021ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக அறிமுகமாகி இதுவரை 14 டி20 போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ளார். இதுவரை அவரிடம் இருந்து பெரிய ஆட்டம் வரவில்லை என்பதனால் அவர் அணியிலிருந்தும் தற்போது கழட்டிவிடப்பட்டுள்ளார்.

டி20 கிரிக்கெட்டில் அதிரடியான பேட்ஸ்மேனாக பார்க்கப்பட்டாலும் கூடுதல் உடல் எடையுடன் இருப்பதனால் அவரது உடற்தகுதி பலரது மத்தியிலும் விமர்சிக்கப்பட்டு வந்தது. அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீஸ் நாடுகளில் இந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலக கோப்பை தொடரின்போது அவர் விக்கெட் கீப்பராக தேர்வு செய்யப்பட்டார்.

இருப்பினும் ஒரே போட்டியில் விளையாடிய அவர் முதல் பந்திலேயே ஆட்டம் இழந்ததால் அந்த போட்டியோடு ஓரங்கட்டப்பட்டார். அதனை தொடர்ந்து அவருக்கு அந்த தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் தன்னுடைய மகன் அசாம் கான் பாகிஸ்தான் அணியிலிருந்து நீக்கப்படவும், அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியதும் ரமீஸ் ராஜாதான் என்று மொயின் கான் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "உலகக்கோப்பை தொடருக்கான அணியில் எனது மகன் தேர்வு செய்யப்பட்டார். அந்த நேரத்தில் ஒரே ஒரு போட்டியில் மட்டுமே விளையாடிய பின்னர் அவரை நீக்கிவிட்டனர். உலகக்கோப்பை போட்டிகள் நடைபெற்ற போதும் சரி அதற்கு முன்னதாக பயிற்சி போட்டிகளிலும் சரி அசாம் கான் மிகச் சிறப்பாகவே செயல்பட்டு இருந்தார். இருப்பினும் ஒரே போட்டியில் அவர் ஒரு பந்தில் ஆட்டமிழந்ததால் அவரை ரமீஸ் ராஜாதான் நீக்கி உள்ளார். அணியின் நிர்வாகம் மீதும் கேப்டன் மீதும் நான் எந்த வித குற்றச்சாட்டையும் சொல்ல மாட்டேன். அசாம் கான் மீதும் தவறு உள்ளது. அவர் உடல் அளவிலும் மனதளவிலும் வலிமை பெற வேண்டியது அவசியம். நிச்சயம் அவர் பிட்னசில் முன்னேற்றம் காண கவனம் செலுத்துவார். தற்போது அவர் படிப்படியாக பிட்னசில் முன்னேற்றம் கண்டு வருவதை நானும் உணர்கிறேன்" என்று கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.